**செய்தி வெளியீடு எண் : 071** **நாள்: 10.01.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்,**
**கானகம், கக்கன் காலனி மற்றும் சிங்காரவேலர் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதிகள்**
**மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**
**திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் ஆய்வு**

*****

வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் கட்டப்பட்ட கானகம், கக்கன் காலனி மற்றும் சிங்காரவேலர் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதிகளை இன்று (10.01.2022) மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

1990–91ஆம் ஆண்டு கட்டப்பட்ட கானகம் திட்டப் பகுதியில் உள்ள 480 குடியிருப்புகள் மக்கள் பயன்பாடு மற்றும் தட்ப வெப்ப மாறுதலினால் சிதிலமடைந்துள்ளதால் தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் பரிந்துரையின்படி, இக்குடியிருப்புகளை இடித்து விட்டு மறு கட்டுமானம் செய்ய ரூ.80.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுகட்டுமானம் மேற்கொள்ள அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு குடியிருப்பு நலச் சங்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களை கேட்டறிந்து, மறு கட்டுமான திட்டத்தில் உள்ள தற்போது திருத்தியமைக்கப்பட்ட சிறப்பு அம்சங்களை சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அங்கு வாழும் பகுதி மக்களுக்கு விளக்கி எடுத்துரைத்தார். அதனடிப்படையில், இக்குடியிருப்பு வாசிகள் இரண்டு மாத காலத்திற்குள் குடியிருப்புகளை காலி செய்து, வாரியம் மறுகட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளை திரும்ப பெற்று, குடியிருப்புகளை ஒப்படைக்க ஒரு மனதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையில் உறுதி அளித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, பெசன்ட் நகர் அருகிலுள்ள கக்கன் காலனி வாரிய குடியிருப்பினை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் அறிக்கையினை பெற்று மறுகட்டுமானம் செய்வது குறித்து முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

அதன் பின்னர், திருவான்மியூர், சிங்காரவேலர் நகர் வாரிய குடியிருப்பினை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடியிருப்பு நலச் சங்கங்களின் கருத்துக்களை கேட்டறிந்து, வாரியத்தின் மூலம் ரூ.1.40 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பழுது நீக்கம் மற்றும் சீரமைப்பு பணிகளை சங்கத்தினரின் ஆலோசனைகளை பெற்று செயல்படுத்துமாறு வாரிய அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹசன் மௌலானா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஹிதேஸ் குமார் மக்வானா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. கோவிந்தராவ், இ.ஆ.ப., வாரிய தலைமைப் பொறியாளர்கள் திரு. இராமசேதுபதி, திரு. இராம.மோகன் மற்றும் வாரிய அதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**